# வீட்டிற்கோர் புத்தகசாலை

நூலகம், நூல்கள் குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை?

குறிப்புப் சட்டகம்

முன்னுரை

நூலகம்

நூல்கள்

முடிவுரை.

முன்னுரை:

வீட்டிற்கோர் புத்தக சாலை வேண்டும் என்ற கருத்தை நம் ஒவ்வொருவரின் மனத்திலும் விதைத்தவர் பேரறிஞர் அண்ணா. நூலகம், நூல்கள் குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகளைக் காண்போம்.

நூலகம்:

வீடுகளில் மேஜை, நாற்காலி உள்ளிட்ட பல பொருட்களும், சிறு கடை அளவுக்கு உடைகளும், சிறு வைத்தியசாலை அளவுக்கு மருந்துகள் இருக்கும். ஆனால் புத்தகசாலை மட்டும் இருக்காது. வாழ்க்கையில் அடிப்படைத் தேவைக்கு அடுத்த இடம் புத்தகசாலைக்குத் தரப்பட வேண்டும். மக்கள் மனத்திலே உலக அறிவு புக வழிவகை செய்யவேண்டும். அவர்கள் உலகம் மற்றும் நாட்டை அறிய, ஏடுகள் வேண்டும். அடிப்படை உண்மைகளையாவது அறிவிக்கும் நூல்கள் சிலவாவது வேண்டும். கொஞ்சம் வசதியுள்ள வீட்டார் விஷேசங்களுக்குச் செல்லும்போது புத்தகங்கள் வாங்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால் சிறு புத்தக சாலையை எளிதில் அமைக்கலாம்.

நூல்கள்:

பூகோளம், சரித்திரம் தொடர்பான ஏடுகள் இருக்க வேண்டும். நமக்கு ஒழுக்கத்தையும் வாழ்வுக்கான வழிகளையும் காட்ட, வீட்டிற்கோர் திருக்குறள் கட்டாயம் இருக்க வேண்டும். சங்கஇலக்கிய சாராம்சத்தைச் சாதாரண மக்களும் அறிந்து கொள்ளும் வகையில் உள்ள ஏடுகள் இருக்க வேண்டும். விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைப் பற்றிய முக்கியமான தகவல்களைத் தரும் நூல்கள் இருக்க வேண்டும். விடுதலைக்கு உழைத்தோர், மக்கள் மனமாசு துடைத்தோட, தொலை தேசங்களைக் கண்டவர்கள்.

முடிவுரை:

வீரர்கள், விவேகிகள் ஆகியோர் வாழ்க்கைக்குறிப்பு ஏடுகள் ஆகியவை இருக்க வேண்டும். வீட்டிற்கோர் புத்தகசாலை அமைத்துக் கொண்டால், நாட்டிற்கு நல்ல நிலை ஏற்படும் என்று பேரறிஞர் அண்ணா தம் வானொலிச் சித்திரத்தில் தெரிவிக்கிறார்.